**செய்தி வெளியீடு எண்: 853** **நாள்: 23.11.2018**

**மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.எடப்பாடி கே. பழனிசாமி அவர்கள் இன்று (23.11.2018) சென்னை, கலைவாணர் அரங்கத்தில் நடைபெற்ற தமிழ்நாடு காவல்துறையின் வீரத்தியாகிகள் புத்தகம் வெளியிடுதல் மற்றும் 6119 சீருடைப் பணியாளர்களுக்கான பணி நியமன ஆணைகள் வழங்கும் விழாவில் ஆற்றிய உரை.**

மாண்புமிகு இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா தெய்வத்தை வணங்கி,

காவலர் பணிக்கென பணி நியமன ஆணைகள் வழங்குதல் மற்றும் வீரத் தியாகிகள் என்ற புத்தகம் வெளியிட தலைமை தாங்குவதில் மட்டற்ற மகிழ்ச்சி அடைகின்றேன். தமிழ்நாட்டிற்கும், தமிழ்நாட்டு மக்களின் நலனிற்காகவும் தங்களது இன்னுயிரை ஈந்த தமிழகக் காவல் துறை, சிறைத் துறை மற்றும் தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் துறையினரின் தியாகத்தினை அங்கீகரித்து, மக்களுக்கு பெருமை சேர்க்கும் வகையில் அவர்கள் புரிந்த வீர, தீரச் செயல்களை சித்தரிக்கும் அழகிய வண்ணப் புத்தகத்தை வெளியிட்டு, தமிழ்நாடு சீருடைப் பணியாளர் தேர்வாணையத்தால் தேர்ந்தெடுக்கப்பட்ட **6,119** ஆளிநர்களுக்கு பணி நியமன ஆணைகள் வழங்கும் இந்த விழாவில் கலந்து கொண்டு உங்களை சந்திப்பதில் நான் மட்டற்ற மகிழ்ச்சி அடைகிறேன்.

இந்த இனிய நிகழ்ச்சியிலே கலந்து கொண்டிருக்கின்ற மாண்புமிகு மீன்வளத் துறை அமைச்சர் **அண்ணன் ஜெயகுமார் அவர்களே!**

இந்த நிகழ்ச்சியிலே கலந்து கொண்டு சிறப்பித்துக் கொண்டிருக்கின்ற வருவாய்த் துறை அமைச்சர் **சகோதரர் உதயகுமார் அவர்களே!**

மற்றும் இந்த நிகழ்ச்சியிலே பங்கு பெற்றிருக்கின்ற மரியாதைக்குரிய சட்டமன்ற உறுப்பினர்களே, நாடாளுமன்ற உறுப்பினர்களே!

தமிழ்நாடு அரசின் தலைமைச் செயலாளர் அவர்களே!

உள்துறை, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறையின் கூடுதல் தலைமைச் செயலாளர் அவர்களே!
காவல் துறை தலைமை இயக்குநர்அவர்களே!

தீயணைப்பு மற்றும் மீட்புப்பணிகள் துறையின் இயக்குநர்அவர்களே!

தமிழ்நாடு சீருடை பணியாளர் தேர்வாணையத்தின் தலைவர் அவர்களே!

சிறைத் துறையின் கூடுதல் காவல்துறை இயக்குநர்அவர்களே!

மற்றும் இந்த நிகழ்ச்சியில் பங்குபெற்றிருக்கின்ற முன்னாள் காவல்துறை இயக்குநர்களே,
மற்றும் வருகை தந்திருக்கின்ற அனைத்து காவல் துறை உயர் அதிகாரிகளே! காவலர்களே!
பணிநியமன ஆணைகள் பெற்று,
காவல் துறை, சிறைத் துறை, தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் துறைகளில் சேரவுள்ள ஆளிநர்களே!
பணியில் இருந்தபோது வீரமரணமடைந்த காவல், சிறை மற்றும் தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் துறையினரின் பெருமைமிகு குடும்ப அங்கத்தினர்களே!
பத்திரிகை மற்றும் ஊடகத் துறை நண்பர்களே!

உங்கள் அனைவருக்கும் என்னுடைய முதற்கண் நன்றிகலந்த வணக்கத்தை தெரிவித்துக் கொள்கிறேன்.

**தோல்வி வரும்பொழுது விடா முயற்சியுடன் இருத்தல்**
**துன்பம் வரும்பொழுது தைரியமாக இருத்தல்**
**பதவி வரும்பொழுது பணிவுடன் இருத்தல்**
**ஏழ்மை வரும்காலத்தில் நேர்மையாக இருத்தல்**
**கோபம் வரும்பொழுது நிதானமாக இருத்தல்**
**செல்வம் வரும்பொழுது எளிமையாக வாழ்தல்**

என்ற ஆன்றோரின் அறிவுரைகள், உங்கள் பணியினை திறம்பட ஆற்றுவதற்கு மிகவும் உதவிகரமாக இருக்கும்.

மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்கள், காவல் துறையின் பணியினை ராணுவத்துடன் ஒப்பிட்டு, ராணுவம் எப்படி நாட்டுக்கு வெளியே உள்ள எதிரிகளிடமிருந்து நாட்டை காப்பாற்றுகிறதோ, அதே போல், உள்நாட்டிலுள்ள சமூக எதிரிகளிடமிருந்து நாட்டு மக்களை காவல் துறை காப்பாற்றுகிறது என்று ஒப்பிட்டு கூறுவார்.

''**உடலில் எத்தனையோ உறுப்புகள் உள்ளன. ஆனால் இந்த உறுப்புகளிலேயே மிகவும் தலைசிறந்தது நாக்கு. அதாவது சாமர்த்தியமாக, சாதுரியமாக, திறமையாகச் செயல்படுவதில் நாக்கிற்கு இணை வேறு எதுவும் இல்லை என்று சொன்னால் அது மிகையாகாது. நாக்கின் நிலைமையை நீங்கள் எண்ணிப் பாருங்கள். வாயின் நடுவிலே உள்ள நாக்கைச் சுற்றி 32 பற்கள் உள்ளன. இந்த 32 பற்களும் அந்த நாக்கை கடித்து, குதறி தள்ளக்கூடிய வலிமை வாய்ந்தவை. ஆனால் இந்த சாதுர்யமான நாக்கு, ஆயுட்காலம் முழுவதும் அந்த 32 பற்களுக்கு இடையிலேயே இருந்து திறமையாக செயல்பட்டு, வெற்றிகரமாக காலத்தை ஓட்டுகிறது. தினம் தினம் தப்பித்தோம் பிழைத்தோம் என்ற நிலையில் வாழ்கின்ற நாக்கு எத்தனை பணிகளை செய்கிறது ? கண்டிப்பாக பேசவேண்டிய நேரங்களில் கண்டிப்புடன் பேசுகிறது, கட்டளை இட வேண்டிய நேரங்களில் கட்டளையிடுகிறது. கனிவாக பேச வேண்டிய நேரங்களில் தேன்மழை போன்ற சொற்களை பொழிகிறது. சிலரை மிரட்ட வேண்டிய நேரத்தில் அதையும் செய்கிறது. சுவையான, சத்தான உணவுகளை இந்த உடலுக்கு வழங்குகிறது. பலவிதமான கடமைகளை, காரியங்களை இந்த நாக்கு திறமையாக செயலாற்றுகிறது. அதுவும் பற்களாகிய எதிரிகளுக்கு நடுவில் இருந்து கொண்டே செயலாற்றுகிறது. இந்த நாக்கினைப் போன்று நீங்களும் சமயோசிதமாக செயல்பட்டு அளிக்கப்பட்ட பணியினை வெற்றிகரமாக முடிக்க வேண்டும்**'' என்ற மாண்புமிகு அம்மா அவர்களின் அமுத வாக்கினை பின்பற்றி நீங்கள் பணியாற்ற வேண்டும். சீருடைப் பணியாளர்கள் சிறப்பாக பணியாற்ற உடல் தகுதி மிகவும் இன்றியமையாதது. அதனை பேணிக்காக்க தகுந்த

உடற்பயிற்சிகளையும், தியானமும் தினமும் செய்து, உடலையும், மனதையும் கட்டுக்கோப்பாக வைத்திருக்க வேண்டும்.

காவல் துறை, சிறைத் துறை, தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் துறை ஆகியவற்றிற்கு தகுந்த சீருடை சார்நிலைப் பணியாளர்களை நியமிக்கும் நோக்கத்தோடு, தமிழ்நாடு சீருடைப் பணியாளர் தேர்வாணையம் **1991**ஆம் ஆண்டு நவம்பர் மாதம் உருவாக்கப்பட்டது.

**"பிணியின்மை செல்வம் விளைவின்பம் ஏமம்**
**அணிகளன்ப நாட்டிற்கு இவ்வைந்து"**

**அதாவது நோயின்மை, செல்வம், விளைதல், மகிழ்ச்சி, காவல் என்னும் ஐந்தும் பெற்றிருத்தல் நாட்டிற்கு அழகு**

என்ற வள்ளுவர் பெருமானின் வாக்கிற்கு இணங்கவும், "அமைதி, வளம், வளர்ச்சி" என்ற மாண்புமிகு அம்மா அவர்களின் தாரகமந்திரத்தின் வழிகாட்டுதலின்படியும், மாண்புமிகு அம்மாவின் அரசு தமிழ்நாட்டு மக்களின் நலனை கருத்தில் கொண்டு பல்வேறு முனைப்பான நடவடிக்கைகளை எடுத்து வருகிறது. உலகத்திலேயே திறமை வாய்ந்த ஸ்காட்லாண்டு யார்டு போலீசுக்கு இணையாக தமிழ்நாட்டு காவல் துறையின் பணி பாராட்டி பேசப்பட்டு வருகிறது. மேலும், பெண்களுக்கு எதிரான குற்றங்களை தடுக்க அனைத்து மகளிர் காவல் நிலையம் அதிக அளவில் நிறுவப்பட்டது தமிழ்நாட்டில் மட்டும்தான். இத்தகைய பெருமை மிக்க தமிழ்நாடு காவல் துறையில் உங்களுக்கு பணியாற்ற வாய்ப்பு கிடைத்திருக்கிறது.

அது போன்று, தமிழ்நாடு சிறைத் துறையினர், குற்றம் புரிந்தவர்களுக்கு தண்டனையை நிறைவேற்றும் பொறுப்போடு மட்டுமல்லாமல், மேற்படி சிறைவாசிகள் மனம் திருந்தி வாழ்வதற்கான நடவடிக்கைகளையும் மேற்கொள்வதோடு, அவர்களின் மறுவாழ்விற்கும், பல நல்ல அரிய திட்டங்களை செயல்படுத்தி வருகின்றனர்.

தமிழ்நாட்டில் ஏற்படும் இயற்கை பேரிடர்களின் போதும், தீ மற்றும் இதர பெரும் விபத்துக்களின் போதும், தமிழக தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் துறையினர் தங்களின் உயிரை பணயம் வைத்து பொதுமக்களையும் அவர்களது உடமைகளையும் பாதுகாத்து சீரிய முறையில் செயல்பட்டு வருகின்றனர்.

இவ்வாறாக, இந்த மூன்று பிரிவினரும் ஒருங்கிணைந்து செயல்பட்டு தமிழ்நாட்டு மக்களுக்கு சேவை செய்து வருகின்றனர். இது போன்ற பெருமைகளைக் கொண்ட தமிழக காவல் துறை, சிறைத் துறை மற்றும் தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் துறைகளில் பணியில் சேரும் நீங்கள், பெருமிதம் கொள்ள வேண்டும். நாங்களும் பெருமை கொள்கிறோம்.

சென்ற ஆண்டில் தமிழ்நாடு சீருடை பணியாளர் தேர்வாணையத்தால் 15,621 சீருடை பணியாளர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டு 16.10.2017 அன்று என்னால் பணிநியமன ஆணைகள் வழங்கப்பட்டன. நான் அந்த நிகழ்ச்சியில், உரையாற்றுகையில், இதுமட்டுமல்லாமல் இன்னும் ஆறாயிரத்துக்கும் மேற்பட்ட பணியிடங்கள் தமிழ்நாடு சீருடை பணியாளர் தேர்வாணையத்தால் விரைவில் நிரப்பப்பட உள்ளது என்று அறிவித்தேன்.

''நாங்கள் செய்வதைதான் சொல்வோம்; சொல்வதைத்தான் செய்வோம், மேலும் சொல்லாததையும் செய்வோம்'' என்ற மாண்புமிகு அம்மா அவர்களின் வாக்கிற்கிணங்க, இன்று தமிழ்நாடு சீருடை பணியாளர்கள் தேர்வாணையத்தால் தேர்வு செய்யப்பட்ட 6,119 சீருடைப் பணியாளர்களுக்கு பணி நியமன ஆணைகள் வழங்கப்படவுள்ளன. இதில் 5,531 நபர்கள் காவல் துறைக்கும், 351 நபர்கள் சிறைத் துறைக்கும் 237 நபர்கள் தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் துறைக்கும் பணியமர்த்தப்பட்டுள்ளனர். இன்று, காவல் துறையில் சுமார் 5 விழுக்காட்டிற்கும் குறைந்த பணியிடங்கள் மட்டுமே காலியாக இருக்கின்றன. இந்தப் பணியிடங்களையும் கூட விரைவில் நிரப்ப நடவடிக்கைகள் எடுக்கப்பட உள்ளன.

தமிழ்நாடு அரசு 2011ம் ஆண்டு முதல் இதுநாள் வரை 1,112 சார்பு ஆய்வாளர்களையும், 32,905 இரண்டாம் நிலை காவலர்களையும் தெரிவு செய்து பணிநியமன ஆணை வழங்கியுள்ளது. மேலும், மாண்புமிகு இதயதெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆணைக்கிணங்க, 2014ம் ஆண்டில் 9,140 நபர்கள், தமிழ்நாடு சிறப்பு காவல் இளைஞர் படையினராக பணிநியமனம் செய்யப்பட்டு, அவர்களில் 8,569 நபர்கள் இரண்டாம் நிலை காவலர்களாக 2016–2017–ஆம் ஆண்டுகளில் பணி நியமனம் செய்யப்பட்டுள்ளனர்.

**‘‘மூன்றெழுத்தில் என் மூச்சிருக்கும்**
**அது முடிந்த பின்னாலும் பேச்சிருக்கும்**
**உள்ளம் என்றொரு ஊர்இருக்கும்**
**அந்த ஊருக்குள் எனக்கொரு பேர் இருக்கும்**
**கடமை அது கடமை ––––**
**அன்பே உன் அன்னை**
**அறிவே உன் தந்தை**
**உலகே உன் கோவில்**
**ஒன்றே உன் தேவன்**
**வாழை மலர் போல பூமி முகம் பார்க்கும்**
**கோழை குணம் மாற்று தோழா**
**நாளை உயிர்போகும் இன்று போனாலும்**
**கொள்கை நிறைவேற்று தோழா,’’**

என்ற புரட்சித் தலைவர் அவர்களின் பாடல் வரிகளுக்கு ஏற்ப நீங்கள் பணியாற்றி தமிழ்நாடு காவல் துறையின் நற்பெயரை நிலைநிறுத்த வேண்டும் என்று கேட்டுக் கொள்கின்றேன்.

மாண்புமிகு அம்மா அவர்கள் 2016 ஆம் ஆண்டு சட்டமன்ற தேர்தலுக்காக வெளியிட்ட தேர்தல் அறிக்கையில், தமிழகம் தொடர்ந்து அமைதி பூங்காவாக திகழ நடவடிக்கை எடுக்கப்படும் என்றும், குற்ற நிகழ்வுகளை தொடர்ந்து குறைத்திட நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் தெரிவித்திருந்தார். அதன்படியே தமிழ்நாடு தொடர்ந்து அமைதி பூங்காவாக திகழ்ந்து கொண்டிருக்கிறது. அதேபோன்று குற்ற நிகழ்வுகளும் குறைந்துள்ளன. இதுபற்றிய புள்ளிவிவரம்

சமீபத்தில் வெளியிடப்பட்ட தேசிய குற்றவியல் ஆவண காப்பக அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. மேலும், மெட்ரோ நகரங்களில் சென்னையும், பெரு நகரங்களில் கோயம்புத்தூரும் பெண்கள் வாழ பாதுகாப்பான நகரங்கள் என அறிவிக்கப்பட்டுள்ளது. இதற்கெல்லாம் அடிப்படைக் காரணம் காவல் துறையினரின் தன்னலமற்ற பணி என்பதை நினைத்து நீங்கள் பெருமைப்பட வேண்டும் என்று இந்த சந்தர்ப்பத்தில் தெரிவிக்கின்றேன்.

நேற்றையதினம், புது தில்லியில் இந்தியா டுடே பத்திரிகை சார்பாக தேசிய அளவில் பல்வேறு காரணிகள் அடிப்படையில் மாநிலத்தின் வளர்ச்சி ஆய்வு செய்யப்பட்டு அதில், தமிழ்நாட்டில் சட்டம், ஒழுங்கு சிறப்பாக செயல்படுகின்றது என்பதற்காக விருது வழங்கப்பட்டுள்ளது. இந்த விருது உங்கள் பணிக்குக் கிடைத்த வெற்றி என்பதை பெருமையோடு குறிப்பிட விரும்புகிறேன்.

மாண்புமிகு முன்னாள் குடியரசுத் தலைவர் டாக்டர் அப்துல் கலாம் அவர்கள் பாகிஸ்தானின் எல்லையை ஒட்டி அமைந்திருந்த ராணுவ பிரிவுகளை பார்த்துவிட்டு வந்தபோது அவருக்கு ஏற்பட்ட அனுபவம் ஒன்றை உங்களுடன் பகிர்ந்து கொள்ள விரும்புகிறேன்.

‘‘நீங்கள் முப்பது வருட காலம் ராணுவத்தில் வேலை செய்யும் வாய்ப்பு உங்கள் எதிரே காத்திருக்கிறது. அதிகாரி என்ற முறையில் எதை உங்களது சிறப்பான குறிக்கோளாக வைத்துக் கொண்டு பணிபுரியப் போகிறீர்கள்’’, என்று ராணுவ வீரர்களிடம் திரு. அப்துல் கலாம் அவர்கள் கேட்டார்.

மூத்த அதிகாரிகள் பலரும் அமைதியாக இருந்தபோது, ஓர் இளம் அதிகாரி, ‘‘சார், எனக்கு ஒரு கனவு இருக்கிறது. ‘‘ மற்றவர்கள் கைப்பற்றிய எனது தாய் பூமியை எல்லாம் மீட்டெடுக்க வேண்டும்’’ என்றார். அதைக் கேட்டவுடன் கூட்டமே சிலிர்த்து எழுந்து, இளம் அதிகாரியைப் பார்த்து எல்லோரும் சந்தோஷமாக ஆரவாரம் செய்தார்கள்.

எனவே அந்த இளம் ராணுவ வீரரைப் போல தெளிவான இலக்கினை நிர்ணயம் செய்து கொண்டு பணியாற்றுங்கள் என அன்புடன் உங்களை கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு அம்மா அவர்களும் மற்றும் அவரைத் தொடர்ந்து மாண்புமிகு அம்மாவின் அரசும் சீருடை பணியாளர்களுக்கு எண்ணற்ற சலுகைகளை ஆண்டுதோறும் வழங்கி வருகிறது. அவற்றில் சிலவற்றை இங்கே குறிப்பிட விரும்புகிறேன்.

மாண்புமிகு அம்மா அவர்களைத் தொடர்ந்து மாண்புமிகு அம்மாவின் அரசும் எடுத்த துரித நடவடிக்கைகள் காரணமாக காவல் துறை முழுமையாக நவீனமயமாக்கப்பட்டுள்ளது.

காவல் துறைக்கென தனியாக ஒரு வீட்டுவசதி கழகம் அமைக்கப்பட்டுள்ளது. இதன் மூலம் காவலருக்கென தங்குவதற்கான குடியிருப்புகளும் மற்றும் உங்கள் சொந்த இல்லம் திட்டத்தின் கீழ் சொந்த குடியிருப்புகளும் தமிழ்நாடு முழுவதும் கட்டப்பட்டு வருகின்றன. காவல் நிலையங்கள் புதியதாக கட்டப்பட்டும், ஏற்கனவே உள்ள காவல் நிலையங்கள் புதுப்பிக்கப்பட்டும் வருகின்றன.

காவல் துறையினரின் மனநலன் மற்றும் குடும்பநலன் ஆகியவற்றை பேணி பாதுகாப்பதற்காக மாண்புமிகு அம்மாவின் அரசால் உருவாக்கப்பட்ட திட்டமான **காவலர் நிறைவாழ்வு பயிற்சி திட்டம் என்னால் சமீபத்தில் தொடங்கி வைக்கப்பட்டது. இந்த திட்டம் பெங்களூரில் உள்ள நிம்ஹான்ஸ் என அழைக்கப்படும் தேசிய மனநலம் மற்றும் நரம்பியல் அறிவியல் நிறுவனத்துடன் இணைந்து தமிழ்நாடு அரசால் தமிழ்நாட்டு காவல் துறையினர் மற்றும் அவர்தம் குடும்பத்தினருக்கு வழங்கப்படும் பயிற்சி ஆகும்.** அனைத்து மாவட்டம் மற்றும் காவல் பிரிவுகளிலும், சிறப்பு பிரிவுகளிலும் பணியாற்றும் காவலர்களுக்கும் அவர்கள் குடும்பத்தினருக்கும் இந்த பயிற்சி அளிக்கப்பட்டு வருகிறது. இந்தியாவிலேயே ராணுவத்திலோ அல்லது துணை ராணுவத்திலோகூட

இம்மாதிரியான பயிற்சி இதுவரை அளிக்கப்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. இதற்காக அரசால் 10 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது என்பதை மன மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

இவ்விழாவில் தமிழக சீருடைப் பணியில் சீரிய முறையில் வீரத்துடன் பணி புரிந்து, பணியின் காரணமாக நாட்டிற்காகவும், மக்களின் நலனிற்காகவும் தன்னுயிர் நீத்த நிகழ்வுகளை நினைவு கூர்ந்து **"வீரத் தியாகிகள்"** என்ற புத்தகத்தினை வெளியிடுவதில் நான் பெருமகிழ்ச்சி அடைகின்றேன்.

இப்புத்தகத்தில் 1960ஆம் ஆண்டு முதல் இதுவரையிலும் தமிழக காவல், சிறை, தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் துறையில் தமது உயிரினை துச்சமாக நினைத்து பணியின் போது உயிரினைத் துறந்த 146 வீரத் தியாகிகளின் சேவைகள் தெளிவாக விவரிக்கப்பட்டுள்ளன. இதில் 118 காவல் துறையினர், 23 தீயணைப்பு மற்றும் மீட்புப்பணிகள் துறையினர் மற்றும் 5 சிறைத் துறையினர் தொடர்பான குறிப்புகள் வெளியிடப்பட்டுள்ளன. தமது தனிப்பட்ட வாழ்க்கை மற்றும் குடும்பத்தினரை கருத்தில் கொள்ளாமல் சமுதாயம் மற்றும் மக்கள் நலனையே பெரிதெனக் கருதி நமது இன்றைய நல்வாழ்க்கைக்காக தங்கள் இன்னுயிரை ஈந்த இத்தியாகிகள் மிகவும் போற்றத்தக்கவர்கள். குறிப்பாக, சமுதாயத்திற்கு கேடு விளைவித்து, பொது அமைதிக்கு பெரும் அச்சுறுத்தலாக விளங்கிய நக்சல் தீவிரவாதிகள், உள் மற்றும் அண்டை நாட்டு தீவிரவாதிகள் மற்றும் சமூக விரோதிகளை ஒடுக்கும் பணியில் ஈடுபட்ட போது, தங்களது உயிரினைத் துறந்து வீரமரணம் அடைந்த காவல் துறையைச் சார்ந்தவர்களின் பணிகளை என்றும் நம்மால் மறக்கமுடியாது.

பொதுமக்களை இடர்பாடுகளின் போது மீட்கும் பணியில் தங்களது இன்னுயிரை ஈந்த தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் துறையினைச் சார்ந்தவர்களின் பணிகளும் மெச்சத்தகுந்ததாகும்.

மேலும், தண்டிக்கப்பட்ட குற்றவாளிகளை நல்வழிப்படுத்தும் பணியில் ஈடுபட்டிருந்து வீரமரணம் எய்திய சிறைத்துறை பணியாளர்களின் சீர் மிகுந்த பணிகள் நமது அமைதியான வாழ்க்கைக்கு அடித்தளமிட்டதாகும்.

இவ்வீரத் தியாகிகள் தற்போது நம்மிடையே இல்லையென்றாலும் அவர்களுடைய விலை மதிப்பற்ற தியாகச் செயல்கள் இன்றும், என்றும் நமது நினைவில் உள்ளன. இதற்கேற்ப, தங்களின் இன்னுயிரை ஈந்து நாம் மற்றும் சமூகம் நலமுற வாழ தங்களது உயிரை மாய்த்துக் கொண்ட இவ்வீரத் தியாகிகளுக்கு இத்தருணத்தில் எனது சிரம் தாழ்ந்த வணக்கத்தைத் தெரிவித்துக் கொள்கிறேன். இத்தியாகிகள் சிறப்புற செயல்பட அவர்களது குடும்பமும் உறுதுணையாக இருந்துள்ளது. எனவே, அத்தியாகிகளின் குடும்பத்தார் அனைவருக்கும் தமிழக அரசின் சார்பிலும், தமிழக மக்களின் சார்பிலும் எனது பாராட்டுதல்களை தெரிவித்துக் கொள்கிறேன்.

தமிழ்நாட்டில் சட்டம் ஒழுங்கை நிலைநாட்டுவதற்காக உயிர்நீத்த காவலர்களின் தீரச் செயல்களை நினைக்கும்போது எனக்கு பிரான்ஸ் நாட்டில் ஒரு இளம் பெண் நிகழ்த்திய உலக சாதனை நினைவுக்கு வருகிறது. அதனை உங்களிடம் பகிர்ந்து கொள்ள விரும்புகிறேன்.

**‘ஜோன் ஆப் ஆர்க்’ என்ற இளம் பெண்.**

15ஆம் நூற்றாண்டில் இங்கிலாந்து–பிரான்ஸ் ஆகிய நாடுகளுக்கு இடையே கடும் போர் நடந்து கொண்டிருந்த காலம். பிரான்ஸின் பல பகுதிகளை இங்கிலாந்து கைப்பற்றியது. பிரான்ஸ் அரசனான ஏழாவது சார்லஸ், அதிகாரங்கள் எதுவுமின்றி பொம்மையாக இருக்கும் நிலைக்கு தள்ளப்பட்டான்.

பிரான்ஸ் தேசத்தில் சிறிய கிராமத்தில் எளிய விவசாயக் குடும்பத்தில் பிறந்தவள் ஜோன். இவள், தனது தாய்நாடான பிரான்ஸ், இங்கிலாந்திடம் அடிமைப்பட்டுக் கிடப்பதை பற்றி, தன் தந்தையின் மூலம் அறிந்திருந்தாள். தனது தாய்நாட்டை அந்நிய ஆதிக்கத்தில் இருந்து விடுவிக்க வேண்டும் என்ற விருப்பம்

அவளுக்கு தோன்றியது. நாளடைவில் இந்த விருப்பம் தீவிரமடைந்தது. இதனை தனது தாய் தந்தையரிடம் தெரிவித்தாள். அவர்கள், ‘‘நீ திருமணம் செய்து கொண்டு வாழும் வழியைப் பார்’’ என்று அறிவுரை கூறினர்.

ஆனால் அவள் தாய் நாட்டை விடுவிக்க வேண்டும் என்ற தனது எண்ணத்தில் உறுதியாக இருந்தாள். ஒரு சிலரது துணையுடன் பிரான்ஸ் அரசர் ஏழாவது சார்லஸ் அவர்களை சந்தித்தாள் ஜோன். தான் இங்கிலாந்தின் ஆதிக்கத்தில் இருந்து பிரான்ஸை மீட்க வந்திருப்பதாக அரசனிடம் பணிவுடன் தெரிவித்தாள். மேலும் ஒரு முக்கிய நகரை மீட்க பிரஞ்சுப் படையை தன் தலைமையின் கீழ் அனுப்புமாறு வேண்டினாள். பெரும் தயக்கத்திற்கு பின் அவளது கோரிக்கையை அரசன் ஏற்றான்.

போர்க் கவசம் அணிந்து ஒரு கையில் உருவிய கத்தி, மறு கையில் அல்லிப் பூக்கள் வரையப்பட்ட வெண் கொடியுடன் குதிரையின் மீது அமர்ந்து கொண்டு ஐந்தாயிரம் பிரஞ்ச் போர் வீரர்களுடன் புற்றப்பட்டாள் ஜோன். இது நடந்தது 1429 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம். அப்போது அவளது வயது 18. இளம் பெண் ஒருவரது தலைமையில் வரும் பிரெஞ்ச் படையை பார்த்து முதலில் சிரித்தனர் ஆங்கிலேயப் படையினர்.

ஆனால் சுதந்திர வேட்கை மிகுந்த ஜோனின் உணர்ச்சியூட்டும் தலைமையின் கீழ் வீரப்போர் புரிந்த பிரெஞ்ச் படையினரின் தாக்குதலில் நகரின் கோட்டைகள் ஒன்றன் பின் ஒன்றாக வீழ்ந்தது. கடைசியாக அவள் போரில் காயமுற்றாலும், அதனைப் பொருட்படுத்தாமல் கடும்போர் புரிந்து அந்த நகரை கைப்பற்றினாள். இவளது வீரத்தினைக் கண்ட ஆங்கிலேயப் படையினர் மிகவும் வியந்தனர். இது போன்ற பல போர்களில் போரிட்டு பிரான்ஸ் தேசத்துக்கு வெற்றி மேல் வெற்றியை தேடிக் கொடுத்து, ஆங்கிலேயர்களை பிரான்சின் வடக்கு மூலைக்கே விரட்டியடித்தாள். இதனையடுத்து, பிரான்ஸின் அரசனாக ஏழாவது சார்லஸ் முடி சூடிக் கொண்டார்.

இத்தகைய சாதனை புரிந்த ஜோன் வாழ்ந்தது மொத்தம் 19 ஆண்டுகள்தான். இந்த வீராங்கனையின் வீரம் இன்றும் பிரான்ஸ் நாட்டில் போற்றப்பட்டு வருகிறது.

இந்த சரித்திர உண்மை சொல்வது என்ன? ஒவ்வொருவரும் பெரும் சாதனைகளுக்காகவே பிறந்திருக்கிறோம். அவற்றை நிகழ்த்திக் காட்டும் திறனும், வலிமையும் நம் ஒவ்வொருவரிடம் இயற்கையாகவே அமைந்துள்ளன. அவற்றை உணர்ந்து செயல்படுவதே நமது கடமை.

மேலும், இன்று பணி நியமனம் பெறவுள்ள நீங்கள் எதிர்காலத்தில் பதக்கங்கள் பல குவிக்கும் திறமை மிக்கவர்களாக திகழ வேண்டும் என உளமாற வாழ்த்துகிறேன்.

இந்த விழாவினை நல்ல முறையில் ஏற்பாடு செய்த அனைத்து நல் உள்ளங்களுக்கும் எனது நன்றியை தெரிவித்துக் கொள்கிறேன்.

அண்ணா நாமம் வாழ்க!

வளர்க புரட்சித் தலைவர் அவர்களின் புகழ்!

ஓங்குக மாண்புமிகு அம்மா அவர்களின் புகழ்!

தொடர்க மாண்புமிகு அம்மா அவர்களின் ஆட்சி!

நன்றி,

வணக்கம்.

* * * * *

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**